தலைப்பு 276 – பதுளை மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 276 - பதுளை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பதுளை மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	சொத்துக்கள் அகற்றுவதன் மூலம் 02 சந்தர்ப்பங்களின் போது உழைக்கப் பட்டிருந்த கூட்டுத்தொகையான ரூபா 363,000 காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக இனங் காணப்படாமல் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப் பட்டிருந்தது.	எதிர்காலத்தில் அந்த வருமானங்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் உள்ளடக்கப்படும்.	சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு வேலைத் திட்டமொன்று பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ii)	திறைசேரி கணனி அச்சிடல் SA 10 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் கிடைத்த மொத்த தேறிய ஏற்பாடு கள் ரூபா 2,688,907,924 ஆக இருந்த போதிலும் ACA-2(iv) நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவின நிதி யீட்டல் பொழிப்பில் உள்நாட்டு	ஏற்றுக்கொள்கின்றோம். திறைசேரி கணனி அச்சிடலில் தேறிய நிதி ஏற்பாடு சரியாக உள்ளதுடன் எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும்	மீதிகளுக்கிடையி லான வேறுபாடு களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

நிதியங்களிலிருந்து கிடைத்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,681,972,924 ஆக காண்பிக்கப் பட்டமையால் ரூபா 6,935,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	போது சரிசெய்யப்படும்.	வேண்டும்.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
திறைசேரி அச்சிடல் பிரதி SA-50 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர் களின் முற்பணம் "பீ" கணக்கின் ஆண்டில் மொத்த வரவு வைத்தல்களின் கூட்டுமொத்தம் ரூபா 175,586,090 ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட திணைக்கள கட்டுப் பாட்டுக் கணக்கு பொழிப்பு (படிவம்-05) இன் பிரகாரம் அந்த மீதி ரூபா 176,020,858 ஆக காண்பிக்கப்பட்ட மையால் ரூபா 434,768 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	இந்த வேறுபாடுகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	மீதிகளுக்கிடை யிலான வேறுபாகளை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	மஹியங்கனை பிரதேச செயலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு உரிய ரூபா 6,965,273 ஆன பட்டியல் பெறுமதி நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கட்டிடக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையால் கட்டிடங்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்தப் பெறுமதி நடை முறை வேலைக் கணக்கில் உள்ளடக்க வேண்டியிருந்ததுடன் தவறொன்றினால் கட்டிடக் கணக்கில் உள்ளடக்கப் பட்டுள்ளது.	உரிய பிரகாரம் கொடுக்கல் வாங்கல்களை கணக்கு வைக்கப்படும் போது உறுதிப்படுத்து கின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும்.
(ii)	மஹியங்கனை பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ விடுதியை நிர்மாணிப்பதற்குரிய வேலை பூர்த்தி உறுதிப்படுத்தல், பொறியியலாளர் கம்பனியால் 2020 யூலை மாதம் 30 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந் ததுடன் மஹியங்கனை	எதிர்காலத்தில் இந்த பெறுமதி கட்டிடக் கணக்கில் உள்ளடக்கப் படும்.	உரிய மீதிகள் சொத்துக் கணக்கிற்கு மாற்றுவதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான வேலைத்

	பிரதேச செயலாளர் 2020 செப்டெம்பர் 18 ஆம் திகதி உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருந்தார். மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட வேலை விடயங்கள் முடிவடைந்திருக்கும் போது கணக்காய்வுத் திகதியான 2025 மார்ச் 28 ஆம் திகதி வரையிலும் உத்தியோகபூர்வ இல்லத்தின் பெறுமதி நடைமுறை வேலைக் கணக்கில் ரூபா 8,046,918 ஆக காண்பிக்கப்பட்டமையால் கட்டிடக் கணக்கு அப்பெறு மானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.		திட்ட மொன்றை ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	ஊவா பரணகம பிரதேச செயலகத் திற்குரிய இலக்கம் 250-2069 என்ற கெப் வண்டியின் கிரயத்தை இனங் கண்டு நிதியல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்த துடன் அது மீளாய்வாண்டின் போது ரூபா 327,000 தொகையில் விற்றுத் தீர்க்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். இந்தக் கெப் வண்டியின் பெறுமதி இனங்கண்டு உரிய பதிவேடுகளில் உள்ளடக்கப்படும்.	சொத்துக்கள் உரிய பிரகாரம் இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யும் வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) கட்டுநிதி மீதி

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்த்துவைக்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 68,933,164 ஆகும்.	ஏற்றுக்கொள்கின்றோம். 2024 ஆம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தல் கடமைகளுக்காக தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக வழங்கப்பட்ட முற்பண தொகை ரூபா 9,604,064 உம், எல்லப் பிரதேச செயலகத்தால் ரூபா 7,850 தொகை சிகாஸ் தரவு முறைமை சரிசெய்தல் மற்றும் பதுளை பிரதேச செயலகத்தினால் மீள திருப்பி அனுப்பப்பட்ட ரூபா 59,321,250 சிகாஸ் முறைமையில் பிழையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	கட்டுநிதி மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச்செல்லப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	**நிலையான சொத்துப் பதிவேடு** 2022 திசம்பர் 13 ஆந் திகதிய இலக்கம் 2022/05 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் நிலையான சொத்துக்கள்	நாளதுவரையாக்கப்படும்.	அரசாங்க கணக்குகள் வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம்

	மொடியுலின் மூலம் சொத்துப் பதிவேடு தயாரித்து நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை.		நிலையான சொத்துப் பதவேடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ii)	நிதிப் பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு (அங்கீகரிக் கப்பட்ட செலவினம்) பேரேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டு முதல் நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் வலயத்திற்குரிய செலவினப் பேரேடு நாளதுவரையாக்கப்பட்டள் ளது.	நிதிப் பிரமாணம் 447 இன் பிரகாரம் 138 ஆவது பொது படிவத்தில் திணைக்கள ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவினம்) பேரேடொன்று பேணிச்செல்வதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	**இழப்பு பதிவேடு**		
	நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு தொடர்பான அறிக்கை யிடுவதற்கும், முற்பணக் கணக்குகளின் இழப்புக் கள் மற்றும் ஏனைய இழப்புக்கள் தொடர்பான விபரங்களை பேணிச் செல்வதற்காகவும் தனித் தனியான பதிவேடுகள் பேணிச்செல்லப்பட் டிருக்கவில்லை.	ஏடுகள் நாளதுவரையாக் குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற படிவத்தின் படி இழப்பு தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மதிப்பீடு தயாரிக்கும் போது பொருத்தமானதாகவும் செயற்திறனானதா என சரியான கவனத்துடன் மேற்கொள்ளப் படாமையினால் 03 செலவின விடயங்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டு அளவில் 19 சதவீதம் முதல் 160 சதவீதத்திற்கிடையிலான நிதி ஏற்பாட்டின் அளவொன்று நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	உரிய செலவின விடயங் களின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையின் காரணமாக மாற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது.	மிகவும் பொருத்தமான மற்றும் சரியான திட்ட முறைமையின் அடிப்படையில் எதிர்வரும் ஆண்டிற்கான செலவின மதிப்பீடு தயாரிக்க வேண்டி யிருந்ததுடன் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை முழுமையாக பயன்படுத்துவதற்காக முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	11 செலவின விடயங்களுக் குரிய மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 97,738,296 நிதி எற்பாடுகளில் ரூபா 23,498,776 சேமிக்கப் பட்டிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவின விடயத் திற்காகவும் கிடைத்த தேறிய நிதி ஏற்பாட்டில் வீதமாக 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் பரந்திருந்தமை அவதானிக்கப் பட்டது.	2024 ஆம் ஆண்டில ஏற்பட்ட பல்வேறு நடைமுறை ரீதியான நிலைமைகளின் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேமிக்கப் பட்டிருந்தது.	மேற்படி
(இ)	மீளாய்வாண்டிற்குரிய 12 மீண்டெழும் செலவின விடயங்களின் மொத்த செலவினத்தில் 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான அளவும் மற்றும் 06 மூலதன செலவின விடயங்களின் மொத்த செலவினத்தில் 39 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையிலான அளவும் டிசம்பர் மாதம் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	செயற்திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களில் அதிகமான அளவு ஆண்டின் அரையிறுதிப் பகுதியில் அமுல்படுத்தப் பட்டதுடன் அதற்குரிய உறுதிச்சீட்டுக்கள் அதிக அளவில் டிசம்பர் மாதம் கிடைத்திருந்தது.	திட்டங்களுக்கு இணங்க செலவின செயற்பாடுகளை செயற்திறனாக முகாமைத்துவம் செய் வதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக் கப்படல் வேண்டும்.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

	சட்டங்கள், விதிகளுடனான தொடர்பு	அவதானிப்பு பெறுமதி ரூபா		இணங்காமைகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபனவிதிக் கோவை					
	XXIV அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு	3,031,686		இடமாற்றலாகிச் சென்ற, மரண மடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற, வேலை நீக்கத்திற்கு உட்பட்ட மற்றும் சேவையைச் விட்டுச் சென்ற 44 உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிட வேண்டிய 01 வருடம் முதல் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற கடன் மீதிகள் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவி ல்லை.	கடன் மீதிகளைத் தீர்த்து வைக்குமாறு ஊவா மாகாண சபைக்கு அறிவித்திருந்த போதும் தீர்த்து வைத்திருக்கப்பட் டிருக்கவில்லை.	கால ரீதியில் கடன்களை அறவிடாத உத்தியோகத் தர்களை இனங்கண்டு முறையான பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் மீதியை அறவிடுவதற்கும் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை					
	நிதிப் பிரமாணம் 104		(i)	இழப்பு நட்டம் தொடர்பாக பூரண அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஏழு நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்படுமாயின் ஆரம்ப அறிக்கை யொன்றை வழங்குவத்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன்	ஏற்றுக்கொள்கின் றோம். ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்குமாறு மீகஹகியுல பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள துடன் ஏனைய நட்ட இழப்பிற்குரிய விசாரணை சபை	அறிக்கை தயாரிக்காத உத்தியோ கத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஆரம்ப அறிக்கை

		இழப்பு மற்றும் நட்டங்கள் ஏற்பட்ட 02 சந்தர்ப்பங்களின் போது தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	நியமித்து விசாணைகள் மேற்கொள்ளப்படுகி ன்றது.	விரைவாகத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
1,629,690	(ii)	விபத்து ஏற்பட்டு நீண்ட காலம் கடந்திருந்த 06 நட்ட இழப்புக்கள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை.	02 நட்ட இழப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 (4) பரிசோதனை சபை அறிக்கை கிடைத்த பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதாகவும் மேலும் 02 நட்ட இழப்புக்களுக்குரிய பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு செலுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ள துடன் ஒரு நட்ட இழப்பை பதிவழிப்பதற்கும் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளமை யும் ஏனைய நட்டங்கள் தொட்பாக உள்நாட்டலுவல்க ள் அமைச்சிலிருந்து ஆலோசனை கோரப்பட்டுள்ளது.	கால ரீதியில் நடவடிக்கை எடுக்காமல் உத்தியோகத்தர் கள் தொடர்பான முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நிதிப்பிரமாணத்தி ன் ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந் து அறவிடுவதற்கும் முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
3,849,333	(iii)	ரிதிமாலியத்த பிரதேச செயலகத்திதிற்குரிய கெப் வண்டி 2017 யூலை 29 ஆம் திகதி விபத்திற்கு உட்பட்டு ரூபா 6,349,333 மொத்த நட்டத்தில் ரூபா 2,500,000 காப்புதிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. காப்புறுதியின் மூலம்	இந்த தொகையை செலுத்துமாறு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக் கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது.	முறையான பிரகாரம் பரிசோதனைகள் நடாத்தி நிதிப் பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய தரப்பினரிமிருந்து நட்டத்தை அறவிடல் வேண்டும்.

			மீளளிப்புச் செய்யாத நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வில்லை.		
(இ)	**அரச நிருவாக சுற்றறிக்கை**				
	2016 டிசம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை	-	04 பிரதேச செயலகங்களில் 05 வாகனங்கள் தொடர்பாக தொடர்புடைய சுற்றறிக்கையின்பிரகாரம் எரிபொருள் எரிவுப் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்க வில்லை.	எரிபொருள் எரிவுப் பரிசோதனையை விரைவாக மேற் கொண்டு அறிக்கை இடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	அலுவலக நடைமுறை விதிக் கோவையின் விதி 139	640,796	விதி 139 இன் பிரகாரம் மேவுகை அங்கீகாரம் இன்றி ஊவாக பரணகம பிரதேச செயலகத்தில் பதிற்கடமைக் கணக்காளருக்கு 2020 ஒக்டோபர் 09 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரை பதிற்கடமை சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின் றோம். உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற் காக தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	அலுவலக நடைமுறை விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் அங்கீகாரமின்றி சம்பளம் பெற்ற உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 யூலை 26 ஆம் திகதிய இலக்கம் 2394/56 என்ற அதிவிஷேட வர்த்தமானியின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் சனாதிபதியால் வெளியிடப் பட்ட கால எல்லையில் மற்றும் 2024 செப்டெம்பர் 25 ஆந் திகதிய இலக்கம் 2403/19 என்ற அதி விஷேட வர்த்தமானியின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம்	பண்டாரவளை பிரதேச செயலகத்தின் களஞ்சிய வசதிகள் காணப்படாமை யின் காரணமாக அந்த சந்தர்ப்பத்தின் போது நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கும், ஹப்புத்தலை மற்றும் ஊவா	சட்டத்திற்குப் முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர் தொடர்பாக முறையான பிரகாரம்

பொதுத் தேர்தல் வெளியிடப்பட்ட கால எல்லையில் அரசாங்க நிறுவனங்கள் ஊடாக அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பிரகாரம் பொருட்கள் மற்றும் உபகரணங்களை பகிர்ந்தளித்தல் நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 07 பிரதேச செயலகங்களில் 33,232 நலனாளிகளுக்காக அரிசி பகிர்ந்தளிக்கும் இரண்டாவது கட்டம் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 03 பிரதேச செயலகங்களுக்கு 47 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5,790,270 பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.	பரணகம பிரதேச செயலகங்களில் 03 சந்தர்ப்பங்களின் போது பொருட்கள் பகிர்ந்தளிக்கப் பட்டிருந்தது.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கந்தகெட்டிய பிரதேச செயலகத்தால் 2024 ஒக்டோபர் 24 ஆம் திகதி வரை 02 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 22,433,710 பெறுமதியான 28 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். 16 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப் பட்டுள்ளதுடன் மதிப்பீடு தயாரிக்காமை, செயற்திட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப் படாமை போன்ற விடயங் களின் காரணமாக ஏனைய செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	எல்ல பிரதேச செயலகத்தால் சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 5,944,977 செலவில் 2021 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட பத்திக் மற்றும் கை இயந்திர ஆடை உற்பத்தி மற்றும் அது சார்ந்த பூர்த்தி ஆடைகள் தயாரிக்கும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2024 செப்டெம்பர்	இது தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்ச்சியாக பின் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்வதற்கு

	09 ஆம் திகதி வரையில் செயற்திட்டம் ஆரம்ப கட்டத்தில் பின்னடைவிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. செயற்திட்ட அறிக்கையின் படி சுற்றுலாதாரிகளை இலக்காகக் கொண்டு உற்பத்தையை செய்தல் மற்றும் ஏற்றுமதி சந்தைக்கு இலக்காகக் கொண்டு உற்பத்தியை ஏற்படுத்துதல் என்ற நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. நலனாளிகள் தொடர்ச்சியாக செயற்திட்டத்திற்கு பங்களிக்காமை, மூலப் பொருட்கள் வழங்குதல், உற்பத்திகளின் தரத்தன்மை, பயிற்சித் தேவைகள் மற்றும் சந்தைகள் இனங்காணல் தொடர்பான பிரச்சினைகள் எழுந்ததன் அடிப்படையில் நலனாளிகள் செயற்திட்டத்தில் இருந்து விலகிச் செல்லும் ஆபத்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக அரசாங்கத்தால் ரூபா 06 மில்லியனுக்கு அண்மித்த தொகை செலவிடப்பட்டுள்ள இந்த செயற்திட்டத்தில் இருந்து முதலீட்டுடன் ஒப்பிடும் போது நலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.		உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் கையளிக்கப்படுகின்ற முறையில் வேலைத் திட்டங்கள் தயாரித்து அமுல்படுத்தி பின் தொடர் நடவடிக்கைகள் செய்தல் வேண்டும்.
(ஆ)	சில வேலைகள் - பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹாலிஎல பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்துள்ள 03 சங்கங்களுக்கு வழங்கப்பட் டிருந்த ரூபா 494,550 பெறுமதியான உபகரணங்கள் உரிய சங்கத்தின் நலன் புரி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப் படாமல் தனியார் பயன்பாட்டிற்காக பெறப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.	பாதுகாப்பின்றியதன் காரணமாக உரிய பொருட்கள் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொறுப்பில் வீடுகள் வைக்கப்பட்டுள்ளது.	முறையான மேற்பார்வை மேற் கொள்வதற்கும் உரிய உபகரணங்களை உச்ச அளவில் பயன்பாட்டிற்கு எடுப்பதனையும் உறுதிப்படுத்துகின்ற வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

4.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மண்சரிவின் காரணமாக ஆபத்திற்கு உட்படுகின்ற 65 குடும்பங்களை மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகள் ஹப்புத்தளை பிரதேச செயலகத்தால் 2019 ஒக்டோபர்	வீடமைப்பு செயற் திட்டத்திற்குரிய 07 வீடுகளின் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கூரை வேலைகள் பூர்த்தி	மண்சரிவுக்கு ஆபத்திற்கு உட்பட்ட பிரதேசங்களின் மக்களை மீண்டும்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
	மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட போதும் 2024 திசம்பர் வரையும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்து மீள் குடியமர்த்தப்பட்டிருக்கவில்லை.	செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	குடியமர்த்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	ஆபத்திற்கு உட்பட்டிருந்த போதும் மீள் குடியமர்த்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆபத்திற்கு உட்பட்ட 07 நலனாளிகளுக்கு ஊவா பரணகம பிரதேச செயலகத்தால் ரூபா 10,475,000 தவணைப் பணமொன்று செலுத்தப்பட்டதுடன் மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், உரிய பிரகாரம் மேற்பார்வைகளை மேற் கொண்டு மீள் குடியமர்த்தும் நடவடிக் கைகளை விரைவாக பூர்த்தி செய்வதன் மூலம் ஆபத்திற்கு உட்பட்டவர்கள் பதுகாப்பின்றி இருந்தமையால் விடுவிப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.	07 நலனாளிகளுக்காக வீட்டுப் பாதிப்பிற்காக இதுவரையில் செலுத்தப்பட்டுள்ள தொகையில் 06 பேர்களின் நடவடிக்கை கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது டன் தற்போது விளைவற்ற கொடுப்பனவாக இனங் காணப்பட்ட ஒருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 02 இலட்சம் தொகை மீண்டும் அறவிடுவதற்கோ அல்லது வீட்டை நிர்மாணிப்பதற்கான நலனாளியிடமிருந்து அறவிடுவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப் படும்.	மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகளை கால ரீதியில் மேற்கொள்ளாத உத்தியோகத்தர் கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் மண் சரிவு ஆபத்திற்கு உட்பட்ட பிரதேசங்களின் மக்களை மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகளை விரைவாக மேற் கொள்ளல் வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
எல்ல பிரதேச செயலகத்தால் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பத்திக் மற்றும் கை இயந்திர ஆடை உற்பத்தி மற்றும் அது சார்ந்த பூர்த்தி ஆடைகளைத் தயாரிக்கும் செயற் திட்டத்தை ஆக்கபூர்வமாக திட்டமிட்டு அமுல்படுத்தாமையின் காரணமாக ரூபா 1,481,712 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட தையல் இயந்திர உபகரணங்களில் 33 உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.	05 நலனாளிக் குழுக்கள் துணி அச்சிடும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் தண்ணீர் பம்பி இன்னுமொரு சௌபாக்கிய உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஓவலொக் இயந்திரம் தேவையான நலனாளிகளுக்கு வழங்குவதற்கோ அல்லது ஜுக்கி மெசின்களுக்கு பரிமாற்றிக் கொள்ளவதற்கு இனங்காணப்படுவதுடன் இந்த ஆண்டில் மீண்டும் நலனாளிகளின் செயற் திட்டங்களுக்கு வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.	செயற்திட்டங்களை அமுல் படுமத்துதல் மற்றும் மேற்பார்வை பொறுப்பு உத்தியோகத்தர் களினால் இந்தப் பணிப்பொறுப்புக்கள் உரிய பிரகாரம் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் வேலைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கும் இந்த செயற்திட்டத்தின் உபகரணங்களை செயற்திறனாக பயன்பாட்டிற்கு எடுத்து செயற்திட்டத்தில் எதிர் பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பண்டரவள பிரதேச செயலகத்தால் ரூபா 384,575 ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்தியமை தொடர்பான பரிசோதனை சபை அறிக்கையின் படி உரிமையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த ரூபா 384,575 தொகையை செலுத்துவதற்கு முடியாதிருந்ததாக அவரினால் 2024 மார்ச் 05 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது ரொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	உரிமையாளர்களிடமி ருந்து அறவிட முடியாதிருந்தாக 2024 ஒக்டோபர் 14 ஆம் திகதி ஓய்வூதிய திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	முறையான பரிசோதனைகளை மேற்கொண்டு உத்தியோகத்தர்களின் கவனமில்லாமையின் அடிப்படையில் மேலதிகமாக செலுத்தப்பட்டிருக்குமாயின் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், ஓய்வூதிய தரவு முறைமையை நாளதுவரையாக பேணிச்செல்வதற்கும் மேலதிக கொடுப்பனவைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமையால் மேலதிக கொடுப்பனவுகள் உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	ஊவா பரணகம பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டி விபத்திற்கு உட்பட்டு எட்டு வருடங்களுக்குப் பின்னர் உரிய நட்டம் ரூபா 500,000 ஆக 2019 மே 15 ஆம் திகதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த துடன் நிதிப் பிரமாணம் 104(4) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் விபத்திற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அந்த நட்டம் 2025 மார்ச் 28 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனை சபை அறிக்கை கிடைத்தவுடன் பொறுப்புவாய்ந்த நபரிடமிருந்து நட்டம் அறவிடப்படும்.	இழப்பினை மதிப்பீடு செய்வதற்கு 08 வருடங்கள் அளவிலான காலத்தை எடுத்த உத்தியோகத்தர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் வாகன விபத்திற்குரிய மதிப்பீடு செய்யப் பட்ட நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.6 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக அரசு பகிர்ந்தளிக்கும் இலக்கம் 24/0645/601/038-01 மற்றும் 2024 ஏப்ரல் 01 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக 2024 ஏப்ரல் 01 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்காக பிரதேச செயலகப் பிரிவிற்கு தேவையான அரிசி இருப்பைக் கொள்வனவு செய்தல் அந்தந்த பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கி வழங்குநர்களைத் தெரிவு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தேவைகளுக்கு இணங்காத வகையில் வழங்குநரைத் தெரிவு செய்தலின் காரணமாக அரிசி போக்குவரத்திற்காக மேலதிக கிலோ மீற்றர் 10,688 இற்காக செலவிடப்பட்ட ரூபா 2,215,474 போக்குவரத்துக் கிரயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமாக அவதானிக்கப்பட்டது.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆலை உரிமையாளர்கள் 371 பேர்கள் பிரதேச செயலக பிரிவின் அடிப்படையில் அறிவிக்கப்பட்ட போதும் 21 பேர் மாத்திரம் முன்வந்த மையால் அரிசி வழங்கல் போதியளவில் இல்லா மையினால் 38.86 சதவீதம் ஏனைய மாவட்டங்களிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.	முறையான விசாரணை நடாத்தி அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக அரிசி பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் எல்ல பிரதேச செயலகப் பிரிவில் 12,970 நலனாளிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்காக கிலோ கிராம் 10 அரிசி பைகள் 12,970 கொள்வனவு செய்தல் மற்றும் போக்குவரத்திற்காக தனியார் நிறுவனத்திற்கு ரூபா 24,308,650 செலுத்தப்பட்டிருந்த போதிலும் கையேற்றல் பதிவேட்டின் பிரகாரம் அரிசி கையேற்கும் உத்தியோகத்தரால் 10 கிலோ கிராம் பைகள் 12,700 கையேற்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த அளவு மற்றும் கையேற்கப்பட்ட அளவிற்கிடையே ரூபா 502,200 பெறும தியான 270 அரிசி பைககளில் வேறு பாடுகள் காணப்பட்டது.	10 கிலோ கிராம் அரிசி பைகள் 270 பதிவேடு களுக்கு உள்ளடக்குதல் தவறிமையின் காரணமாக ஏற்பட்ட வேறுபாடாகும்.	மேற்படி
(இ)	அரசாங்கத்தின் காணிகளின் உரித்தை பாதுகாத்தல் மற்றும் அனுமதியற்ற பிடித்தல்களை தடுக்கும் வகையில் கிராம உத்தியோகத்தர்களினால் பிரிவுகளில்	மஹியங்கனை பிரதேச செயலகப் பிரிவில் அனுமதியற்ற வகையில் பிடித்து வைத்தல் தொடர்பான இரண்டு வாரத்தில்	கால ரீதியில் அறிக்கை சமர்ப்பிக்காத உத்தியோகத்தர் தொடர்பாக முறையான

	காணப்படுகின்ற அனுமதியற்ற பிடித்து வைத்தல் தொடர்பாக ஆ.ஏ.ஆ. 60 படிவ பத்திரத்தின் மூலம் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒரு தடவை பிரதேச செயலாளரால் அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் 02 பிரதேச செயலகங்களில் 08 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அறிக்கை சமர்ப்பிக்குமாறு சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.	நடவடிக்கை எடுப்பதற்கு எதிர் காலத்தில் முறையான பிரகாரம் இரண்டு வார அறிக்கை பெற்றுக்கொள்வ தற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	பதுளை மாவட்டத்தில் 15 பிரதேச செயலகங்களுக்கு உரிய 47 சமுர்த்தி வங்கிகளினால் 4,241 நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் ரூபா 226,947,012 ஆன அறவிட முடியாக் கடன் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அறவிடப்படுவதுடன் செலுத்தாத நலனாளி களின் அறவிட முடியாக் கடனை அறவிடுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிலுவைக் கடன் தொகையை கால ரீதியில் அறவிடாத உத்தியோகத்தர் கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய நிலுவைக் கடன் பணத்தை விரைவாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு பதுளை மாவட்ட செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 79 வெற்றிடங்கள் காணப்பட்ட துடன் மிகைகளின் எண்ணிக்கை 234 ஆகும்.	வெற்றிடமாகக் காணப்படுகின்ற பதவி களை நிரப்புமாறு அரச நிருவாகம் மற்றும் உள்நாட்ட லுவலகள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டதுடன் மிகைப் பதவியணியினரை அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொண்டு ஆட்சேர்த்தல் காரணமாக ஏற்பட்டதாகும்.	பதவியணியினரின் தேவையினை பகுப்பாய்வு செய்து வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் இன்றி பதவியணி யினரில் உச்ச அளவில் பேணிச் செல்வதற்கு விரைவாக வேலைத்திட்ட மொன்று தயாரித்தல் வேண்டும்.